# இயேசு ஊழியங்கள்

**105/229, எம்.டி.எச் ரோடு, வில்லிவாக்கம், சென்னை – 600 049**

**தொலைபேசி எண்: 9003009752**

**மின்னஞ்சல்: beten.yatsar@angeltv.org இணையதளம்: www.jesusministries.org**


என் அன்பு மகளே...

அதிசீக்கிரமாய் வரப்போகும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள். வேதம் சொல்லுகிறது ***சங்கீதம் 139:14 "நான் பிரமிக்கதக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மை துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள்".*** இந்த வசனம், தேவன் மனுஷனை சிருஷ்டித்த விதத்தைப் பற்றி கூறுகிறது. இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதரும் பிரமிக்கத்தக்க அதிசயமாக உண்டாக்கப்பட்டிருக்கிறார்கள். உங்கள் வயிற்றில் வளர்ந்துகொண்டிருக்கும் சிசுவிற்கு ஒவ்வொரு வாரமும் மிகவும் அழகாக மற்றும் அதிசயமாக கை, கால், முகம் போன்ற உறுப்புகள் சரியாக வளர்ச்சியடைகிறது. இவை அத்தனையும் கர்த்தருடைய செயல் மாத்திரமே. எனவே இந்த கர்ப்ப காலத்தில் கர்த்தர் உங்களுக்குச் செய்த நன்மையை எண்ணி அவரை மனதார துதியுங்கள், போற்றுங்கள், புகழுங்கள். அவ்வாறு செய்தால் உங்கள் சிசு, கர்த்தருடைய பிரசனத்தால் நிரம்பியிருக்கும். இப்பொழுது உங்களுக்காக நான் ஜெபிக்கப் போகிறேன். என்னோடு இணைந்து ஜெபியுங்கள்.

***என் அன்பின் பரலோக பிதாவே, இந்த வேளையில் என் அன்பு மகளை உம் கரத்தில் கொடுக்கிறேன். நீர் இந்த கர்ப்பத்தை ஆசீர்வதித்து, பாதுகாத்து வருவதற்காக நன்றி. கர்பத்தில் இருக்கும் சிசுவை நீர் பத்திரமாக பாதுகாத்து பூரண வளர்ச்சியை தந்து ஆசீர்வதியும். உம் கிருபை சூழ்ந்துக்கொள்ளட்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் நல்ல பிதாவே.***

கர்த்தரை துதியுங்கள் அவரை துதிக்கும்போது கிருபை சூழ்ந்துக்கொள்ளும்.

அன்புடன்

சாது சுந்தர் செல்வராஜ்

*குறிப்பு : உங்கள் ஏஞ்சல் டிவி-யில் பெட்டன் யாட்சார் நிகழ்ச்சி ஒவ்வொரு புதன் கிழமை மதியம் 3 மணிக்கும், அதன் மறுஒளிபரப்பு ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30 மணிக்கும் ஒளிபரப்பாகும். காணத்தவறாதீர்கள்!*